*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka
Under No.Q/J/104/News/89
*Established 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol. 156 Jaffna, Friday, January 13 1995 No. 02
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island Rs.100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# Cessation of offensives comes into effect

The President of Sri Lanka Mrs. Chandrika Kumaranathunge and the Leader of the Liberation Tigers of Tamil Eelam, Mr. Vellupillai Prabakaran made a public declaration on 6th January, the Day of 'Epiphany' on cessation of offensives which they co-signed on 5th Janury, 1995. The cessation of offensives came into effect from midnight of 7th January.

Both the LTTE & the Government agreed on a cessation of offensives as a preliminary step towards a cease fire. This agreement was reached at the second round of talks between them on 3rd January, 1995.

The President, declaring open the Parliamentary Sessions for the New Year on 6th January 1995, announced in the course of her Presidential address, that both Mr. Prabakaran and herself had signed on the declaration of cessation of offensives. Later, Mr. Prabakaran & Mrs. Kumaranathunge held independent press conferences in Jaffna & Colombo respectively regarding their signing on a declaration.

Six teams will be appointed to monitor the cessation of offensives. They shall monitor & inquire into any alleged violations. They shall function in the areas, Jaffna, Mullaithivu, Mannar, Vavuniya, Trincomallee & Batticaloa-Amparai, and any other place as & when required. There will be two representatives of the LTTE, two of Government and one international representative who shall head the team Norway & Netherlands have already agreed to send their representatives. Reply is still awaited from Canada

According to the agreement, both parties shall keep a minimum distance of 600 meters between their frontier bases. They shall be able to move about 100 meters from their base. Any movement within 400meters of no man's land shall be considered as a move towards offensive action The Air force & the Navy can continue to do their routine surveillance to protect the country's sovereignty from any possible foreign invasion but shall not attack the LTTE. Fishing in areas other than very close to the Military bases is allowed. Any act of terrorism, bomb blasts, abductions, murders or threats against any political party, group or individual will be treated as an act of offensive

There will be direct communication link between the Commanders of the LTTE & those of Military to solve any dispute In the event no agreement is reached, the monitoring team will mediate.

## BEST LOVED HYMNS 1994

The B. B. C. has been transmitting in a very graphic way in its recent programmes a feature entitled 'Songs of Praise'. Several outstanding musicians, choirs, choir directors, conductors and churches have contributed to the programms which have been broadcast in hospitals fairgrounds, prisons, synagogues, universities, airport terminals, shopping centres and the Houses of Parliament.

According to a survey and popular vote the following ten hymns in their order of priority has been compiled as the best loved hymns in England this year.

Even though hymn singing has become so rare in Jaffna in recent years, our hymn lovers will agree that the hymns listed are also some of our favourites here:

1. Dear Lord and Father of Mankind.
2. The day Thou gavest, Lord is ended.
3. The Old Rugged Cross.
4. How Great Thou Art.
5. Abide with me.
6. Shine, Jesus, Shine.
7. Make me a Channel of Your Peace.
8. The Lord's My Shepherd.
9. Love Divine all Loves Excelling.
10. Great is Thy Faithfulness.

(Courtesy - Church Times 21/10/94.)

## SOLUTION TO ETHNIC PROBLEM ON BANDA-SELVA AGREEMENT?

Mrs. Kumaranathunge, in her Presidential Address to the Parliament on January 6th stated that a new proposal as a solution to the ethnic problem will be drafted on the basis of Bandaranayake - Chelvanayagam pact signed in 1957

Mr. Anton Balasingham, Political Adviser, LTTE, in a press release stated that the LTTE would consider the new proposal. He further said that two rounds of talks have taken place between the Sri Lankan Government & the LTTE.

In these talks it was clearly indicated that lifting of economic embargo, opening of road way for unhindered transport & re-settlement of Tamils in their original places should be done & restoration of normal life should be ensured before the talks to settle ethnic problems he said.

## Tamil scholars feel insulted

Jaffna Tamil Scholars feel that the Tamil Nadu Government had insulted them by not inviting any of the Tamil Scholars in Sri Lanka to participate at the 8th World Tamil Conference held in Tamil Nadu from 1st to 6th January Even the five who attended either on their own or on invitation through courtesy of Japan were deported.

According to reliable sources, the act of deportation was criticised by many in Tamil Nadu The opposition parties in Tamil Nadu are believed to have said

(Continued on page 4)

## Children's Homes Leadership Development Camp

The Children's Homes Leadership Development Camp was held from 14th to 17th December 1994 in the Ottely Hall, Jaffna College, Vaddukoddai, sponsored by the Sri Lanka Churches' Child Care Association (Kindernothilfe e.v) and organized by the Jaffna Diocese of the Church of South India. The camp participants were from Levi Spaulding Boys' Home, Vaddukoddai, Arulmanai Boys Home, Manipay, Harriet Winslow Girls' Home, Uduvil, Arulaham, Maruthanamadam, House of Hope, Inuvil & Chavakachceri Girls' Home, totalling to one hundred and twenty.

The camp commenced with a worship service at the Cathedral Church, Vaddukoddai, conducted by the Rev. A. A. Paul the camp Chaplain. The various events held were efficiently directed by the Camp Director Mr.W. N. Thevakadadcham. The guest speakers were the Rev. C. T. Roberts, who spoke on "The political and economic situation during Christ's birth and the situation today" and Mr. N. A. Vimalendren who spoke on "Basic Psychology and understanding human behaviour". The grand finale was the Camp Fire lit by the chief guests the Rt. Rev. Dr. S. Jebanesan and the Rt. Rev. D. J. Ambalavanar held at the Quadrangle, Jaffna College. The Chief Guests then addressed the audience which was followed with plays presented by the children who were divided into three groups. The certificates and prizes were distributed by Dr. (Mrs.) C Ambalavanar. The benedication was pronounced by the Rt. Rev. Dr. S. Jebanesan. The guests and participants were accorded dinner at Bunker Hall.

## இலங்கையில் ஆண்களின் சராசரி வயது 70.1

இலங்கையிலே தற்பொழுது ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 70.1 வருடங்களாகவும், பெண்களின் வயது 74.8 வருடங்களாகவும் இருந்துவருகின்றது. 1946-1981 என்ற காலப்பகுதியில் ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 21 வருடங்களாகவும், பெண்களின் சராசரி ஆயுட்காலம் 27 வருடங்களாலும் அதிகரித்துள்ளது. 1920ல் ஆண்களின் ஆயுட்காலம் பெண்களின் ஆயுட்காலத்திலும் பார்க்க இரண்டு (2) வருடம் அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது பெண்களின் சராசரி ஆயுட்காலம் ஆண்களின் சராசரி ஆயுட்காலத்திலும் ஐந்து வருடங்கள் அதிகமாகி இருக்கின்றது.

## செய்திச் சிதறல்

### திடப்படுத்தல்

அராலித் திருச்சபையில் வருகையின் நான்காம் ஞாயிறு 18-12-94 அன்று 18 பேர் திடப்படுத்தல் பெற்று சபையில் சேர்ந்துகொண்டனர். இதில் 8 பேர் சமாதானக் கோட்டை திருச்சபை நிலையத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வாராதனையை பேராயர் அதிவண. அறிவர் எஸ் ஜெபநேசன் நடாத்த அவருக்கு உதவியாக சேகர ஊழியன் அருட்திரு ஏ. ஏ. போல் இருந்தார். நற்செய்திப் பாடத்தை சபை ஊழியன் டி. எஸ். மதியாபரணம் வாசித்தார். ஆராதனையைத் தொடர்ந்து சபையார் யாவருக்கும் திடப்படுத்தல் பெற்ற பிள்ளைகளினால் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

### புதிய சிங்கள—தமிழ் அகராதி

புதிய சிங்கள அகராதி மூன்று சென்ற புதன்கிழமை (28-12-94) அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்த வெளியீட்டு விழாவுக்கு இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமைதாங்கினார். இந்த அகராதி திரு. கே. என். டி பீரிஸ் அவர்களாலேயே தயாரிக்கப்பட்டது.

### யாழ்ப்பாண வைத்தியசாலையில் கடந்த 11 மாதங்களில் 320 குழந்தைகள் மரணம்

யாழ்ப்பாண வைத்தியசாலையில் 1994-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் முடிய 320 பிள்ளைகள் மரணம் அடைந்தார்கள் எனத் தெரிகின்றது. இவர்கள் யாவரும் ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகள் ஆவர். இவர்களிலே செப்ரிசீமியாவினாலேயே இறந்தவர்களின் தொகை 110 ஆகும். அடுத்தபடியாக பல குழந்தைகள் மலேரியா நோயினால் இறந்தார்கள்.

### புதிய பெயரில் இயங்கும்

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இதுவரை சர்வோதயம் என்ற பெயரில் இயங்கிவந்த தொண்டர் ஸ்தாபனம் வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் என்ற பெயரில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த சில வருடங்களாக அரச இராணுவத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகள் அளித்து குடியிருப்பு வீடுகள் அமைத்து, அவர்களுக்கு வேண்டிய மலசலகூட வசதிகள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் போன்றவற்றை அமைத்துக் கொடுத்துவந்த தொண்டர் ஸ்தாபனங்களில் 'சர்வோதய'மும் ஒன்றாகும்.

# தஞ்சாவூர் வேதநாயக சாஸ்திரியார்

ஜனவரி மாதம் 11-ம் திகதி தஞ்சாவூர் வேதநாயக சாஸ்திரியார் நினைவுதினமாகும். நமது திருச்சபை பாட்டுப் புத்தகத்திலே பல கிறிஸ்தவ புலவர்களுடைய பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தஞ்ச வேதநாயகரின் பாடல்கள் மற்றைய கவிஞர்களுடைய பாடல்களையும்விடக் கூடுதலாக இருக்கின்றது.

வேதநாயக சாஸ்திரியார் தென் இந்தியாவில் திருநெல்வேலியில் 1774-ம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் தேவசகாயம்பிள்ளை, தாயார் பெயர் ஞானப்பூ அம்மாள். வேதநாயகர் குழந்தையாக இருக்கின்றபொழுது தாயாரை இழந்தார். இளமையிலே இவருடைய மனம் கல்வியை நாடவில்லை. இதனாலேயே இவருடைய ஆசிரியர்கள் 'எமனுக்கு படிப்பு வந்தாலும் இவனுக்குப் படிப்பு வராது' என்று கூறிவிட்டனர். ஆனால் கர்த்தருடைய சித்தமோ வேறுமாதிரியாக இருந்தது. பாளையங்கோட்டையிலே குளோரின்தாள் என்னும் பிராமணப்பெண்ணினால் கட்டப்பட்ட தேவாலயத்தை பிரதிஷ்டை செய்வதற்காக சுபிரடறிக் சுவாட்ஸ் ஐயர் என்னும் லூதரன் (Lutheran) மிஷனரி திருநெல்வேலி மாவட்டத்துக்கு வந்தார். அவர் ஒரு நாள் வேதநாயகர் இரவு ஜெபம்பண்ணிவிட்டு நித்திரைக்குச்செல்வதைக் கண்டார். தந்தை தேவசகாயம் பிள்ளையிடம் சென்று வேதநாயகரைத் தம்முடன் அனுப்புமாறும் தான் அவரை படிப்பித்து ஒரு கல்விமானாக்குவேன் என்றும் கூறினார். தேவசகாயம்பிள்ளையும் சம்மதித்து மகனை சுவாட்ஸ் ஐயருடன் தஞ்சாவூருக்கு அனுப்பினார்.



தஞ்சாவூரிலே அப்பொழுது அரசு செலுத்திய மாராட்டிய மன்னர் குடும்பத்துக்கு சுவாட்ஸ் ஐயர் ஆசிரியராக இருந்தார். இதனாலே வேதநாயருக்கு சரபோஜி என்ற இளவரசருடன் படிக்கின்ற வாய்ப்புக்கிட்டியது. பின்னர் சரபோஜி தஞ்சாவூருக்கு மன்னனாகிய பின்னர் வேதநாயகரை தனது அரண்மனையிலேயே வைத்துக்கொண்டார்.

**பி. நவேந்திர அனுகூலன்**
**B. D.**
**கிளிநொச்சி**

வேதநாயகர், கிறிஸ்தவர்கள் தமது வழிபாடுகளின் தமிழ்ப்பாட்டுக்களை ஆங்கில மெட்டுக்களில் பாடுவதனைக் கண்ணுற்றார். தமிழ் இராகங்களையும், தாளங்களையும், யாப்பு அமைதிகளையும் அறவே அசட்டைசெய்து பாடுவதனைக்கண்டு வேதனைப்பட்டார். எனவே தமிழ் இசை மரபுக்கு ஏற்ற வண்ணம் கிறிஸ்தவ கவிதைகளை இயற்றினார். கிறிஸ்தவ கீர்த்தனைகளை Lyrics என்றும், ஆங்கில மொழிபெயர்ப்பு பாடல்களை Hymns என்றும் குறிப்பிடுவார்கள். கிறிஸ்தவ கீர்த்தனைகளின் தந்தை என வேதநாயகம் சாஸ்திரியாரை குறிப்பிடலாம். இவருடைய கீர்த்தனைகளிலே எளிமை இருக்கும். அதே சமயம் சிறந்த பக்தியும் காணப்படும். உதாரணமாக பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம். 'சருவேசுரா ஏழை பாவி என் பேரிலே தயவாய் இரும் சுவாமி'

வேதநாயகர் எழுதிய நூல்களில் பெத்தலேம் குறவஞ்சி, ஜெபமாலை, பேரின்பக்காதல், ஞானதச்சன், ஞான உலா, வண்ண சமுத்திரம் முக்கியமானவை.

வேதநாயகர் 91 வயது வரை வாழ்ந்து இயேசு பெருமானுக்கு அருந்தொண்டாற்றினார். தமது பிள்ளைகளும் தம்மைப்போலவே இயேசுவின் தொண்டர்களாக வரவேண்டும் என்று விரும்பினார். இன்று அவர் மரபில் வந்த வேதநாயக சாஸ்திரியார் என்றும் ஒருவர் சென்னையில் செய்திப் பணியாற்றி வருகிறார். இவர் வேதநாயகரின் கொள்ளுப் பேரர்களில் ஒருவராவார்.

கவிஞர் கிறிஸ்ணபிள்ளை கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னர் எல்லா மக்களின் மீதும் அன்பு கூர்ந்தார். தாழ்த்தப்பட்ட மக்களை முன்பு ஒதுக்கி வைத்தார் இப்போது ஆரத்தழுவினார். தமிழ் அன்பர்கள், நண்பர்கள், சுற்றத்தார் முதலியோருடன் எப்போதும் மகிழ்வுடன் பேசி இன்புறுவர். 1900ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 4ம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அவருடைய பூதவுடல் பாளையங் கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவருடைய கல்லறையிலே 'அம்மான உன்னையல்லால் எனக்கு ஆர் துணை ஆர் உறவே' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளன.

## ஜெபபுரம் பகல்பராமரிப்பு நிலைய வருடாந்த ஒளிவிழா

வருடாந்த ஒளிவிழா 4.12.94 அன்று புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் போதகர் ப. தேவராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதற்கு பிரதம விருந்தினராக ஜெயபுரம் கத்தோலிக்க திருச்சபையின் வண. பிதா செபஸ்ரியன் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வுக்கு தென்னிந்திய திருச்சபை, சாலோம் நகர் திருச்சபையின் வண. பிதா T.H. வசந்தகுமார் போதகர் அவர்களும் விடுதலை புலிகளின் பிரமுகர்களும் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் உத்தியோகஸ்தர்கள் பொது மக்கள் கலந்து சிறப்பித்தனர். பிரதம விருந்தினரான வண பிதா செபஸ்ரியன் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள்.

பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றது இறுதி நிகழ்வாக ப. தேவராசா போதகர் நன்றியுரை நிகழ்த்தினார். பின்பு கிறிஸ்மஸ் பப்பா வருகை தந்து பிள்ளைகளுக்கு பரிசில்களை வழங்கினார். பரிசில்கள் வழங்கும் வைபவத்துடன் நிகழ்வு நடந்தேறியது.

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி. நீதி: 14 - 34.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841

மலர்: 156 13- 01 - 1995 இதழ்: 02

## புதிய யுகம் உதயமாயிற்று

'இதோ, நான் புதிய காரியத்தை செய்கிறேன் இப்பொழுதே அது தோன்றும் நீங்கள் அதை அறியீர்களா?' [ ஏசாயா 43: 19 ] என்று இஸ்ரவேல் மக்களை நோக்கி அன்று இறைவன் வினாவிய இவ்வினா இன்றும், கடந்த பத்தாண்டுகளாகத் துயரச் சூழ்நிலையில் மூழ்கியிருந்த நம்மை நோக்கி இறைவன் வினாவுகின்றார். ஆம் எல்லாம் வல்ல இறைவன் புதிய காரியங்களைச் செய்யத் தொடங்கியிருக்கிறார். ஆகவே, நாம் முந்தினவைகளை நினையாமல் பூர்வமானவைகளைச் சிந்தியாமல் இறைவனின் திருவருளால் தொடங்கப்பட்ட இப்புதிய யுகத்தை மகிழ்வுடன் வரவேற்போமாக.

கடந்த நாலரை ஆண்டுகளாக வடக்கு கிழக்கு மாநிலத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்த போர் கடந்த 8ம் திகதி ஞாயிறு அதிகாலை தொடக்கம் ஓய்வுக்கு வந்துள்ளது' விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனும், சிறி லங்காவின் முப்படை தளகர்த்தரான ஜனாதிபதி சந்திரிக்காவும் சேர்ந்து ஒப்பமிட்டு வெளியிட்ட இடைக்காலப் போர் நிறுத்தப் பிரகடனம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மதிப்புள்ள ஒப்பந்தமாகும்!

இந்த ஒப்பந்தத்தைப் பிரகடனப்படுத்த ஜனாதிபதி சந்திரிக்கா 'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன், மெய் வருந்தக் கூலி தரும்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, சுத்த மனதுடன் அயராது உழைத்து வந்தார். இனப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டால் தான், நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்து அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட முடியும் என்பதை ஜனாதிபதி சந்திரிக்க மனதார உணர்கின்றார். இதில் ஐயமில்லை!

ஆகவே, இந்த இலக்கை நோக்கி செயல்படுவதற்கான அவர் எடுத்த தீர்மானத்திற்கு நமது ஈழத் தேசியத் தலைவர் உட்பட தமிழ் மக்களினதும் சிங்களமக்களினதும் பெரும்பாலான ஆதரவு அவருக்குண்டு என்பது உண்மை. இந்த ஆதரவு அவருக்கு பேருக்கத்தை அளித்திருக்கின்றது. இதனையறிந்த இராணுவ அதிகாரிகளும் ஜனாதிபதியின் நடவடிகைகளுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர் என்பதை அறிந்து அனைவரும் பெரும் மகிழ்ச்சியடைகின்றனர். இறைவனின் பெருஞ் செயல்களை அவதானித்து உளமார அவருக்கு நன்றி செலுத்துகின்றனர்.

இன்று அமுலாக்கப்பட்ட இப்போர் இடை நிறுத்தம் நிரந்தர போர்நிறுத்தமாக ஆகவேண்டும் மக்களின் அன்றாட வாழ்க்கை பிரச்சனைகள் தீரவேண்டும் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் வாழும் நிலை உருவாக்க வேண்டும். வடக்கு கிழக்கு இணைந்த நிலையில், தன்னாட்சி உரிமை கொண்ட தனியாட்சியை தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் நித்தர அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடு.

இதனை, ஜனாதிபதி சந்திரிக்காவின் தலைமையில் உள்ள அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கும் என்பதே எமது நம்பிக்கை. இந்த நல்ல முடிவு ஏற்படும் வரை இறைவனை நோக்கித் தொடர்ந்து மன்றாடுவோம் சமாதானத் தீர்வுக்காக விடாது நம்பிக்கையுடன் உழைப்போம் வாருங்கள்.

## சபைச் செய்திகள்

### ஒளி விழாக்கள்

**சாவகச்சேரி பாலர் பாடசாலை**

1-12-94 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்டது. வண. எட்வேட் லோறன்ஸ் அவர்கள் ஜெபம் செய்து நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்தார்கள். இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக றிபேர்க் கல்லூரி அதிபர் திரு. நாகேந்திரராஜா அவர்களும், அவரது பாரியாரும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கிருபா வீரசிங்கம் அவர்களும் பங்குபற்றினார்கள். பிரதம விருந்தினர் திரு. நாகேந்திரராஜா அவர்களும், சிறப்பு விருந்தினர் செல்வி கிருபா வீரசிங்கம் அவர்களும் சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபையால் நடத்தப்படும் இப்பாலர் பாடசாலையையும், இதன் ஆசிரியை திருமதி லோஜி சற்குணசிங்கத்தையும் பாராட்டி தங்கள் உரையை நிகழ்த்தினர். தென்மராட்சியில் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளில் இப்பாடசாலை ஒரு சிறந்த பாடசாலையாகக் கணிக்கப்பட்டுள்ளதாகவும், இப்பாடசாலையிலிருந்து கல்லூரிகளுக்கு வரும் மாணவ, மாணவிகள் கல்வியில் மிகவும் முன்னேறிச்செல்கிறார்கள் என்பதையும் உரையாற்றினர். தலைவர் உரை, சபைப்போதகர் வண. எட்வேட் லோறன்ஸ் அவர்களால் வழங்கப்பட்டது. மற்றும் பிள்ளைகளின் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற்றது. பெற்றோரின் சார்பில் திரு.பீட்டர் அருணோதயராஜா அவர்களும், பாலர் பாடசாலை அதிபர் திருமதி லோஜி சற்குணசிங்கம் அவர்களும் தங்கள் உரைகளை முறையே வழங்கினார்கள். பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள், சபையார் அதிகமாக பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர்.

**வரணி பாலர் பகல் பராமபுப்பு நிலையம்**

வரணி பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் ஒளி விழா 12-12-94 திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பெற்றோரின் முயற்சியால் அதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வரணி ஆலயத்துக்கருகில் நடத்தப்பட்டது. மேடையும் வெளிப்பக்கம் அனைத்தும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. சபைப்போதகர் வண. ஏ வி. யேசுதாசன் அவர்களின் ஆரம்ப ஜெபத்துடன் வரவேற்புரை நடத்தப்பட, தீப நடனத்துடன் பிரதம விருந்தினராக பங்குபற்றிய பகல் பராமரிப்பு நிலைய திட்டப்பணிப்பாளர் திரு. வி மித்திரரஞ்சன் அவர்கள் தனது உரையை சுருக்கமாக வழங்கினார்கள். இதைத்தொடர்ந்து நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. நிகழ்ச்சி அறிவிப்பாளராக வண. எட்வேட் லோறன்ஸ் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள். சபைப்போதகர் வண. ஏ. வி. யேசுதாசன் அவர்கள் மிகவும் உற்சாகமாக உலகிற்கு ஒளியாக வந்த இயேசு கிறிஸ்துவையிட்டு சிறிய சொற்பொழிவொன்ற நிகழ்த்தினார்கள். எல்லாவற்றையும் பொறுப்பாகக் கவனித்து வழி நடத்தினார். இப்பாலர் பராமரிப்பு நிலையத்தின் ஆசிரியர்கள் இருவரும் தங்கள் கடமைகளைச் சிறப்பாகச்செய்து நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார்கள். சபைப் போதகரின் ஜெபத்துடன் நிகழ்ச்சிகள் யாவும் சிப்பாக முடிவடைந்தன.

### பலாலி கோப்பாய் ஆசிரியர் காலாசலையின் எதிர்காலம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பலாலி, கோப்பாய் என்னும் இரு ஆசிரிய கலாசாலைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. இக் கலாசாலைகளில் 1000 மாணவ மாணவிகள் படிப்பதற்கு வசதியுண்டு. ஆனால் இப்பொழுது 38 மாணவ மாணவிகளே பயிற்சி பெற்று வருகின்றது.

அரசாங்கம் இப்பொழுது பயிலுநர் ஆசிரியர்களை நியமித்து தொலைக்கல்வி என்ற பயிற்சியையளித்து வருகின்றது. இதனால் ஆசிரிய கலாசாலைக்கு மாணவ மாணவிகள் விண்ணப்பிப்பது அருகி வருகின்றது.

### ஒன்றுகூடல்

30-11-94 அன்று கிழக்கு மாகாணத்தில் இருக்கும் முக்கிய திருச்சபைகள் ஒன்று சேர்ந்து எல்லாப் போதகர்மார்களுக்கும் ஒன்றுகூடல் நடத்தப்பட்டது. அருள்திரு. ஜே. விவேகநாதன் தலைமைதாங்கினார். இக்கூட்டம் முழுநாள் கூட்டமாக நடைபெற்றது. முக்கியமாக ஐக்கியத்தைப் பற்றியும், எவ்வாறு வருங்காலங்களில் அதை சரிவரச் செய்யலாம் என்பது பற்றியும் ஆராயப்பட்டது.

அதில், கண்டிப்பாக ஒரு ஐக்கியம் முக்கியம் எவ்வாறு யாழ். கிஸ்தவ ஐக்கியம். இருக்கின்றதோ அதே வண்ணம் கிழக்கிலும் ஒரு தேவை என்பதனை உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பெறுபேறாக "Eastern Christians Fellowship" எனப் பெயர் சூட்டப்பட்டது.

தலைவர் வண. ஜே. ஜே. விவேகநாதன், துணைத்தலைவர் வண. ஜோன் ஜ. ஏசாயா, செயலர் வண. ஈ. பி. சொலமன்ஸ் இத்தோடு 6 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

இதனூடாக:

1) Combied Carol Service.
2) Easter பஜனை
3) Exchanging of pupits.

மாலை 3-30 மணிக்கு இனிதே ஜெபத்தோடு முடிவுறறது.

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 13 . 01 . 1995


## EDITORIAL

## Our Diocesan House Churches

The "diaspora" of our parishes due to the "war" since June, 1990 has created the dire need for several "house churches" in our Diocese. As an ardent observer of some of these churches in the Chunnakam-Mallakam-North Erlalai areas I am deeply impressed with the committment, devotion, dedication and above all the spontaneous Christian fellowship of the members of the Tellipallai and North Erlalai churches whose church buildings are damaged and their villages under partial or total army occupation.

The Tellipallai Church members living in the vicinity gather in the house of a very honoured and respected Hindu friend. In the context of the present discussions on Pluralism and Dialogue with other Religions, such a gesture speaks more eloquently than words, consultations and resolutions.

The members of the North Erlalai Church meet in the house of their senior members Mr & Mrs Vijeyaratnam. The houses are packed on Sundays, the eucharist is celebrated regularly, the church quotas are paid-in faithfully, the youth and women's fellowships and church committees meet enthusiastically and the men work tirelessly for the progress of their churches. The pastor and family are always on the move shepherding their loveable flocks.

The annual one-day get-together over a sumptuous meal, the choirs, the various services and the Christmas programmes are warm-hearted, well attended and full of life and zest.

It is all reminiscent of first century Christianity of the Acts of the Apostles and of the "house churches" under communist China, even though, thank God they can still meet in the open unlike the "ghettoes" and "catacombs" of the early church or in secrecy as in China.

"Emmanuel-God with us!" is not only a profound prophetic pronouncement, nor only a text for a learned and inspiring sermon, but it has with the gift of the Holy Spirit become a living testimony and reality giving ample credence and substance to the oft repeated dictum that "the gates of hell shall not prevail against Thy Church!"

There are I am aware other such churches spread out in the nooks and corners of the country. The pastors, their families and the parishioners deserve our praise and gratitude for their faithfulness. They are all richly blessed.

Diocesophilus

## Islam Now Third Largest Religious Community In Germany

Bonn- Islam, with more than two million members, is now the third largest religious community in Germany, after the main Roman Catholic and Protestant Churches, *epd* reports.

Germany's Commissioner for Foreigners, Cornelia Schmalz-Jacobsen, called for more intensive inter-religious dialogue, and appealed to the media to distinguish between Islam as a religion and fundamentalist minorities, according to epd. The report also proposed that Islamic religious education be offered at Germany's state schools.

## CHRISTMAS BAJANAI AT THE ASHRAM

The grand finale to the rich Christmas Tamil singing and music this year was the Annual Christmas Bajanai at the Christ Seva Ashram on the afternoon of Monday the 26th of December. It is the considered opinion of many of those who have resided in Jaffna continuosly for the past five or six decades that the Christmas season this year remains unsurpassed for the variety of its programmes and for the participation in all its programmes of a very large number of children, youth and adults.

The beauty of the Bajanai at the Ashram was that its choir was composed entirely of youth from the Women's Centre who have been as a family worshipping in the Ashram for years. Therefore its cohesion, devotion, dedication and committment both to worship and music was transparently clear. Further the occasion was graced by the doyen of Tamil Christian musicians, honoured and respected teacher and violinist par excellence now residing and performing in Singapore Miss Thanam Subbaiyah. That she should be the lead violinist on the eve of her departure to Singapore along with her former pupil Clara Arulanantham of Uduvil Girls' College was another act of deep devotion and love in the scenes of her active years of devotional music in Jaffna. Her former pupil Clara put in her heart and soul with her Guru with great gusto to produce an act of devotion and worship of the highest order. Sevak Sam Annan deserves our whole-hearted gratitude for organising the Bajanai hardly within five days of his return to Jaffna after his six months travel abroad. It is with nostalgic yearning that one could wish that Sevaks Selveratnam, Yesusagayam, Anandanayagam, D. T. Niles, Bishop and Mathuram Kulandran should be living at this hour!

## Tamil Scholar......

(Continued from page 1)

that Jeyalalitha Government tried to play a political gimmick but all her efforts were counter productive. Only a few submitted their papers on the last day of sittings.

## Obituary

We regret to record the death of Mr Lawrence Angelo Anton, a past student of Jaffna College and member of Levi Spaulding Boys' Home, Vaddukoddai. After completion of school career, he did a course in Co-operative movement and was awaiting University admission. He got drowned while swimming in a pond with two of his friends on 5th January.

His father died when he was only 10 years old. Being the eldest in the family much was hoped from him. He leaves behind him, besides his mother, Theresamma, two brothers and three sisters; Viz, Austin, Rex, Theresa, Angela and Annita.

The funeral took place at Vaddukoddai on January 6th. The service was conducted by the Rev. A.A. Paul assisted by Rev. Mrs. A. R. Thambiappa & Mr. D. S. Mathiyaparanam. The Rev. A. Jeyakumaran preached the sermon. Tributes were paid by Mr. G. Rajanayagam, Principal, Jaffna College, Mr.A. Kumaravel, his teacher and Mas. S. Sritharan, a fellow member at Levi Spaulding & fellow student at Jaffna College.

In

**Ever Loving Remembrance**

Of

**NAVARATNAM NAVAREUBAN**

(Dearly beloved Husband of **Preminie**

Father of **Nishan and Dilan**

Son of Mr. & Mrs. P. M. Navaratnam

And Son-in-Law of Mr. & Mrs. C. A. Balasingham)

On his First Death Anniversary

**13-01-1995**

"A loving Husband,
A dutiful Father,
A dear Brother and
A good Friend"

Fondly remembered by his **Father-in-Law, Mother-in-Law, Brothers-in-Law, Relations and Friends.**

"Premavanam"
Uduvil,
13.01.1995.

Registered as a News Paper at the G P. O. Sri Lanka under No. Q / J / 140 / 94. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 13th of January 1995 and published by Mr. T. Tambiappa, Diocesan office, Vaddukoddai.